# 2. தேசிய வருமானமும் செலவும்

## 2.1 பொதுவான போக்குகள்

*1996* இல் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி *3.8* சதவீதத்தினால் அதிக ரித்தது. இது முன்னைய ஐந்துஆண்டுகளின் சராசரி வளர்ச்சி வீதமான *5.5* சதவீதத்தினை விட குறைவானதாகும். *1996* பொருளாதாரம் மெது வடைந்தமைக்கு விவசாயம் மின் உருவாக்கம் கைத்தொழில் வெளியீடு என்பன வற்றில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்த நீண்ட வறட்சியே முதன்மைக்காரணமாகும். மொத்த தேசிய உற்பத்தி ( வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணிவருவாய்களுக்கு சீராக்கம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி ) *1995* இன் அதனது மேம்பாட்டுக்கு முற்றிலும் மாறாக *1996* இல் வெளிநாட்டு முதலீட்டு வருவாய் பெறுகைகளின் குறைப்பின் காரண மாகவும் வெளிநாட்டு படுகடன் மீதான வட்டி கொடுப்பனவின் அதிகரிப்பின் காரணமாகவும் வெளிநாட்டில் இருந்தான தேறிய வருவாய்

அட்டவணை 2.1

(1982)விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்

| துறை | சதவீத அதிகரிப்பு (%) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | 1995(அ) | 1996(அ) | 1995(அ) | 1996(அ) | 1995(அ) | 1996(அ) |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில் | 3.3 | -4.6 | 1 1.4 | -30.0 | 20.3 | 18.8 |
| வேளாண்மை | 3.3 | -5.1 | 9.7 | -28.3 | 17.2 | 15.8 |
| தேயிலை | 1.6 | 5.1 | 0.5 | 3.1 | 1.9 | 1.9 |
| இறப்பர் | 0.9 | 6.3 | 0.1 | 0.9 | 0.4 | 0.4 |
| தெங்கு | 5.1 | -7.6 | 1.8 | -5.2 | 2.1 | 1.9 |
| நெல் | 4.7 | -26.7 | 3.4 | -36.6 | 4.3 | 3.0 |
| ஏனையவை | 2.6 | 3.5 | 3.8 | 9.5 | 8.5 | 8.5 |
| காட்டுத் தொழில் | 1.2 | 1.3 | 0.3 | 0.5 | 1.3 | 1.3 |
| கடற்றொழில் | 4.9 | -3.9 | 1.5 | -2.3 | 1.8 | 1.7 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் | 3.4 | 8.9 | 1.4 | 7.0 | 2.4 | 2.6 |
| 3. தயாரிப்புத் தொழில் | 9.2 | 6.5 | 30.8 | 43.5 | 20.7 | 21.4 |
| தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டுப் பதனிடல் | 4.4 | 1.0 | 1.7 | 0.7 | 2.2 | 2.2 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 10.0 | 7.3 | 27.5 | 39.9 | 17.0 | 17.7 |
| சிறு கைத்தொழில் | 7.1 | 6.3 | 1.7 | 2.9 | 1.5 | 1.5 |
| 4. கட்டடவாக்கம் | 4.9 | 3.4 | 5.8 | 7.6 | 7.0 | 7.0 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் | 10.2 | -2.0 | 2.6 | -1.0 | 1.6 | 1.5 |
| இதில்,: | | | | | | |
| மின்வலு, | 9.7 | -3.8 | 2.2 | -1.7 | 1.4 | 1.3 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பு | 5.5 | 7.5 | 10.5 | 27.3 | 11.3 | 11.8 |
| இதில்,: | | | | | | |
| தொடர்பு | 14.1 | 25.2 | 2.4 | 9.0 | 1.1 | 1.3 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 3.6 | 5.2 | 13.3 | 36.0 | 21.6 | 22.1 |
| இறக்குமதி | 2.1 | 7.4 | 3.3 | 21.5 | 9.0 | 9.4 |
| ஏற்றுமதி | 12.6 | 8.2 | 6.4 | 8.5 | 3.2 | 3.4 |
| உள்நாடு | 2.2 | 2.0 | 3.6 | 6.0 | 9.4 | 9.3 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 10.5 | 10.1 | 9.9 | 19.0 | 5.9 | 6.2 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை | 1.3 | 1.3 | 0.5 | 1.0 | 2.4 | 2.3 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 5.4 | 5.0 | 4.0 | 7.0 | 4.4 | 4.4 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.5 | 4.0 | 2.9 | 4.8 | 3.8 | 3.8 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 5.5 | 3.8 | 93.1 | 122.3 | 101. 2 | 101.9 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி | | | 6.9 | -22.3 | -1. 2 | -1.9 |
| 14. மொத்த தேய உற்பத்தி | 6.0 | 3.1 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மத்திய வங்கி

கணிசமான அளவு மோசமடைந்தமையின் காரணமாக 3.1 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. முதலீட்டு வருவாய் குறைப்புக்கு 1995 இலும் 1996 இலும் சென்மதி நிலுவை பற்றாக்குறையின் காரணமாக சர்வதேச ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் சர்வதேச தாழ்ந்த வட்டிவீதங்களுமே காரணமாகும்.

நடைமுறை சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 7,689,340 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1996 இல் நடுவாண்டு குடித்தொகை 1.1 சதவீதத்தினால் 183,150 இலட்சத்துக்கு அதகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இதன் படி 1996 இல் தலைக்குரிய வருமானம் ரூபா 41,984 இற்கு (அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 760) இற்கு அதிகரித்தது. தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நியதிகளின் படி இலங்கை நடுத்தர வருமான அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றாக மாறுவதற்கான அடிமட்டத்தினை எய்தியுள்ளது. கொடை வழங்கும் நாடுகளிலிருந்தான பெருமளவு சலுகையினைக் கொண்ட உதவிகளின் குறைப்புக்கு ஆரம்பத்திலிருந்தே தயாராக இருக்க வேண்டிய நிலைமையினை இது குறித்துக் காட்டுவதுடன் இலங்கை அதனது எதிர்கால முதலீடுகளுககாக சர்வதேச பணச் சந்தைகளையும் உள்ளடக்கிய ஏனைய மூலங்களில் தங்கியிருக்கவேண்டியேற்படும் என்பதையும் உட்கிடையாக கொண்டுள்ளது.

1996 இன் பொருளாதார செயலாற்றமானது பொருளாதாரத்தின் தாக்கு பிடிக்கக் கூடிய தன்மையினை பிரதிபலித்தது. முதலாம் அரையாண்டின் சார்பு ரீதியில் தாழ்ந்த மட்ட வெளியீடுகளிலிருந்து இரண்டாம் அரையாண்டில் விரைந்த மீட்சியொன்று காணப் பட்டது. அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப் பட்ட வளர்ச்சி வேகத்தை எய்தும் வகையில் கைத்தொழில் உற்பத்தி விரைவாக மீட்சி பெற்றது. மரக்கறி வகைகள் மற்றும் சிறு ஏற்றுமதி பயிர்களின் வெளியீடும் பாரிய அதிகரிப்புகளை பிரதிபலித்தது. கொழும்பில் பயங்கர வாதிகளின் நடவடிக்கைகளினால் மோசமைடைந்த முதலீட்டாளர்களின் உணர்வுகள் திறந்த மற்றும் சந்தை நட்பு கொள்கைகள் தொடர்ச்சியான தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் தாக்கு பிடிக்கமுடியாத நுகர்வோர் உதவிக் கொடுப்பனவுகளின் அகற்றல் என்பனவற்றை அரசு உறுதியாக நடைமுறைப்படு த்தியமையின் காரணமாக மீள நிறுவப்பட்டன. சார்பு ரீதியில் உறுதியான உள்நாட்டு நிதியியல் மற்றும் செலாவணிச் சந்தைகளுடன் இணைந்து இந்த நடவடிக்கைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டுச்சூழலில் நேர்க்கணிய தாக்கத்தினை கொண்டிருந்தன.

அண்மைய ஆண்டுகளில் தயாரிப்புத்துறை பொருளாதாரத்தில் முதன்மைத்துறையாக இருந்து வந்துள்ளது. முதன் முறையாக 1995 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பாரிய பங்களிப்பாளராக தயாரிப்புத்துறை விவசாயத் துறையை முந்தியது. 1995 இல் மொத்த தேசிய உற்பத்தியில் தயாரிப்புத்துறையின் பங்கு 20.7 சதவீதமாக இருந்தவேளையில் இந்தத்துறையில் பெறுமதி கூட்டப்பட்ட வளர்ச்சி இவ்வாண்டில் உண்மைநியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் பெரும்பாலும் மூன்றிலொருபங்காக விளங்கியது. 1996 இல் உண்மைநியதிகளில் தயாரிப்புத்துறை 6.5 சதவீதத்தினால் அதிகரித்து பொருளாதாரத்தின் மொத்த வளர்ச்சியின் 44 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தது. இதில் தொழிற்சாலைக் கைத்தொழில்கள் மட்டும் 40 சதவீத பங்களிப்பைக்கொண்டிருந்தது. 1996 இல் புடைவைகள் மற்றும் அணியும் ஆடைகள், உணவும் குடிபானங்களும் இறப்பர் உற்பத்திப் பொருட்கள் மட்பாண்டங்களும் ஆபரணங்களும் என்பனவற்றின் ஏற்றுமதிகளின் விரிவாக்கத்தினால் வழிநடத்தப்பட்ட தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு 7.3 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது. 1996 இல் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களின் 73 சதவீதத்திற்கு கைத்தொழில் ஏற்றுமதிகள் வகை கூறின.

தயாரிப்புத்துறைக்கும் விவசாயத்துறைக்கும் இடையில் உறுதியான இணைப்பு ஒன்று காணப் படுகின்றது. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு உள்ளீட்டு உற்பத்திப் பொருட்களின் பதனிடல் கைத்தொழிலின் செயலாற்றம் பெருந்தோட்ட பயிர்களின் வெளியீட்டினாலேயே தீர்மானிக்கப் படுகின்றன. பொருளாதாரத்தின் ஏனைய துறைகளின் வளர்ச்சியின் காரணமாக உள்நாட்டு வெளியீட்டில் இந்த நடவடிக்கைகளின் பங்கு சார்புரீதியில் விழ்ச்சியடைந்து செல்கின்றது. இலங்கையில் ஏனைய விவசாய உற்பத்திப்

சிறப்புக் குறிப்பு 2

## சூழல் தேசிய கணக்குகள்

இயற்கை மூலவளங்கள் மற்றும் சூழலின் மீது விரைந்த பொருளாதார அபிவிருத்தியின் பாதகமான தாக்கங்கள் குறித்து உலக சமூகம் அதிகரித்த கவனத்தை கொண்டுள்ளது. தமது இயற்கை மூல வளங்களையும் சூழலையும் விட்டுக்கொடுத்து விரைந்த பொருளாதார அபிவிருத்தியை எய்திய பல நாடுகள் காணப் படுகின்றன. இத்தகைய அபிவிருத்தியானது நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கக்கூடியது அல்ல என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்னவெனில் குறைவடைந்து செல்லும் இயற்கை மூலவளங்கள் உயர்மட்ட வெளியீட்டுக்கு ஆதரவு வழங்குவதற்கு எதிர்காலத்தில் கிடைக்காமல் போகலாம் என்பதே. இதே வேளையில் சூழலின் பாதிப்பானது சமூகத்தின் வாழ்க்கைத் தரங்களின் பின்னடைவுக்கும் இட்டுச் செல்கிறது. எனவே பொருளாதார வளர்ச்சியும் இயற்கை மூலவளங்களினதும் சூழலினதும் முகாமைத்துவமும் இனிமேலும் மாறுபட்ட கொள்கை குறிக்கோள்களாக அன்றி இறுதி அபிவிருத்திக் குறிக்கோளின் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் பரஸ்பர விடயமொன்றாக நோக்கப்படுகின்றது.சூழல் தேசியக்கணக்கு என்ற கோட்பாடு இந்த அபிவிருத்தியின் வெளிப்பாடு ஒன்றாகும்.

சூழல் கணக்குகளானது 1995 இலிருந்து பொருளாதார செயலாற்றத்தின் கூட்டு அளவீட்டையும் மொத்த தேசிய உற்பத்தியையும் பொருளாதார நலன் புரியையும் வழங்குவதற்காக தற்போது பயன்படுத்தப்படும் ஐக்கிய அமெரிக்க தேசியக் கணக்குகள் முறையின் திருத்தப்பட்ட வடிவமொன்றாகும். சூழல் கணக்குகளில் இயற்கை மூல வளங்களின் இழப்பும் பொருளாதார நடவடிக்கையின் போது சூழலுக்கு ஏற்படும் சேதமும் அளவிடப்பட்டு தொகைப்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து பெறப்படும் கூட்டுத்தொகையானது அதாவது இயற்கை மூலவளங்களின் குறைப்புக்கும் சூழலுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்திற்கும் சீராக்கம் செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி நாடொன்றின் பொருளாதார செயலாற்றத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மிகச் சிறந்த குறிகாட்டியாக கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விபரத்திணைக்களம் ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதார மற்றும் சூழல் கணக்குகளின் மைய முறை ஒன்றுடன் தேசிய கணக்குகள் முறையைமுழுமைப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. இந்த மைய கணக்குகள் பொது ஐந்தொகையையும் வருவாய்கணக்குகளையும் முழுமைப்படுத்துகின்றன. ஒவ்வொரு நாட்டிற்குமான முதலாவது நடவடிக்கையாவது இயல் அளவுகளில் அளவிடப்பட்ட இயற்கை மூலவளங்களின் அனைத்தையும் உள்ளடக்கிய ஐந்தொகை ஒன்றினை தயாரிப்பதாகும். இது சூழல் மோசமடைதலுடனான இயற்கை மூலவளங்களின் தேய்வின் நாணய பெறமதியினையும் மதிப்பிடுவதற்கு இயலச் செய்யும். இந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சூழலுக்கு பொருத்தமல்லாத உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளை இனம் காணுவதற்கு இயலுமாக இருப்பதோடு நிலைத்திருக்க முடியாத அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் பொருளாதார வளர்ச்சிக்கான ஆரம்ப எச்சரிக்கைகளையும் வழங்கக்கூடியதாக இருக்கும்.

1977 க்கு பிந்திய காலப்பகுதியில் உண்மை நியதிகளில் இலங்கையின் பொருளாதாரம் ஆண்டு ஒன்றுக்கு 4.5 சதவீத சராசரி வளர்ச்சி வீதம் ஒன்றினை பதிவு செய்தது. இதனோடு இணைந்த நகர்புறம் மற்றும் கிராமப்புறம் ஆகிய இரண்டிலும் சூழல் பிரச்சனைகள் எழுந்துள்ளதாக கூறப்படுகின்றது. நகரமயமாக்கலும் கைத்தொழில் மயமாக்கலும் காற்று மற்றும் நீர் மாசுபடலை விளைவித்துள்ளதோடு கைத்தொழில் நகரங்களில் வாழும் மக்களின் தேகநலத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கிராமப்புறங்களில் அதிகரித்துச் செல்லும் குடித்தொகையானது மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை மூலவளங்களின்மீது அதி கூடிய அழுத்தத்துக்கும் இட்டுச் சென்றுள்ளது. விறகின் பயன்பாடும் தீயிட்ட பயிர்செய்கையும் காடுகளினுள் அத்துமீறலுக்கு இட்டுச் செல்வ தோடு இதன் மூலம் காடுகளின் அழிவும் மண்ணின் தன்மையில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. கனிப்பொருள் மூலவளங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு கூட்டிய பெறுமதியின் வடிவத்தில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இலங்கையில் சூழல் கணக்குகள் முறை ஒன்றினை தயாரிப்பதில் முன்னேறிச் செல்வதற்கு இயற்கை மூல வளங்கள் மற்றும் சூழல் பாதிப்பு தரவுகளின் சேகரிப்பினை வலுப்படுத்துவது முற்தேவையாகும். இதற்கு பலதரப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு தேவைப்படுகின்றது.

பொருட்களின் பதனிடலானது இயக்க விசை கொண்ட கைத்தொழிலாக மாறியுள்ளதோடு ஏற்றுமதிகளின் கணிசமான அளவுகளுடன் சில விடையங்கள் ஏற்கனவே உயர்ந்த தரங்களுக்கு விருத்தியடைந்துள்ளது. 1996 இல் இவற்றுள் சில கைத்தொழில்களும் வறட்சியினால் பாதிக்கப்பட்டன. தொழிற்சாலைக் கைத்தொழில்களில் கூட்டிய பெறுமதியில் பெரும்பாலும் மூன்றில் ஒரு பங்குக்கு வகை கூறும் கைத்தொழில் துணைத்துறைகளான உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை துணைத்துறை அதனது பொருட்களுக்காக விவசாயத்துறையிலேயே தங்கியுள்ளது. எனவே விவசாயத்துறையின் விரிவாக்கமானது தயாரிப்புத்துறையின் வளர்ச்சி செயல்முறைக்கு வசதியளிக்கின்றது. தாழ்ந்த மற்றும் ஒரு சீரான தீர்வை அமைப்பு முறை ஒன்றினை எய்தும் நோக்கில் வர்த்தக மற்றும் தீர்வைக் கொள்கைகள் ஒழுங்கு முறைபடுத்தப் பட உள்ளமையினால் தரம் மற்றும் உற்பத்தித் திறன் என்பனவற்றின் நியதிகளில் தயாரிப்புத் துறை மிகவும் போட்டித்தன்மையுடையதாக மாறவேண்டிய தேவை காணப்படுகின்றது.

1996 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மிதமான வளர்ச்சிக்கு தொடர்ந்து நிலவிய வறட்சியின் தாக்கத்தின் கீழ் விவசாயம் காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித்தொழில் துறையில் காணப்பட்ட பின்னடைவே முதன்மைக்காரணமாகும். 1995 இல் இந்தத் துறை மொத்த தேசிய உற்பத்தியில் 20.3 சதவீதத்தினைக் கொண்டிருந்ததோடு 1995 இன் வளர்ச்சியில் 11.4 சதவீதத்திற்கு வகைகூறியது. 1995 இல் கூட்டிய பெறுமதியின் 3.3 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 1996 இல் வெளியீட்டில் 4.6 சதவீத வீழ்ச்சியுடன் இந்தத் துறை பின்னடைவினை அனுபவித்தது. விவசாயத்துறையினுள் நெல் துணைத்துறை 26.7 சதவீத கடுமையான வீழ்ச்சியினை பதிவு செய்தது.பெரும் போகம் மற்றும் சிறு போகம் ஆகிய இரண்டிலும் நெற்பயிர் மோசமடைந்தமையானது 1996 இல் 341,200 மெற்றிக்தொன் அரிசியின் இறக்குமதியை அத்தியாவசியமாக்கியதோடு 1995 இல் மிகச் சிறந்த அறுவடையானது அரிசி இறக்குமதிகளை 9,460 மெற்றிக்தொன்களுக்குமட்டும் குறைவடையச் செய்தது. 1996 இல் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளின் நோக்கில் தெங்கு உற்பத்தி 1995 இன் வெளியீட்டு மட்டத்திலிருந்து 7.6 சதவீதத்தினால் 27,550 இலட்சம் காய்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

தேயிலை உற்பத்தியின் 5.1 சதவீத அதிகரிப்புக்கு தாழ்நிலத் தேயிலையின் உயர்ந்த வெளியீடே முழுமையான காரணமாகும். அண்மைய ஆண்டுகளில் தாழ்நிலத் தேயிலையின் வெளியீடு படிப்படியாக அதிகரித்துள்ளதோடு 1996 இல் மொத்த தேயிலை வெளியீட்டின் அரைப்பங்கிற்கும் மேலாக காணப்பட்டது. 1996 இல் இறப்பர் உற்பத்தி 6.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இறப்பர் விலைகள் தொடர்ந்தும் கவர்ச்சிகரமாக இருந்த போதிலும் பாரிய இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் அதிகரித்த உற்பத்தியின் காரணமாக 1996 இல் முன்னைய ஆண்டுகளின் உச்ச மட்டத்திலிருந்து அவை வீழ்ச்சியடைந்தன. மரக்கறி வகைகள் பழ வர்க்கங்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ,பால் என்பனவற்றின் வெளியீட்டின் அதிகரிப்பானது ஏனைய விவசாயதுணைத்துறையின் 3.5 சதவீத வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தது. மொத்த மீன் உற்பத்தியில் 90 சதவீதத்திற்கு வகை கூறும் கடல் சார் மீன் வழங்கல் உறைநீர்க்கட்டி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியொன்றின் காரணமாக இரண்டாம் காலாண்டில் வீழ்ச்சி யடைந்தது.

பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் வீழ்ச்சியடைந்து செல்லும் பங்கு கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடையமொன்றாகும். இலங்கையின் குடித்தொகையின் பெரியபாகம் ஒன்று கிராமியத்துறையில் காணப்படுகின்றமையினால் குறிப்பாக பெருந்தோட்டமல்லா இடங்களில் விவசாயத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படவேண்டியதோடு இத் துறையினை இயக்கவிசை கொண்டதாக ஆக்கவும் வேண்டும். இது தொடர்பாக உட்கட்டமைப்பு மற்றும் சந்தைகள் என்பனவற்றின் அபிவிருத்தியினை ஊக்கவிப்பதற்காகவும் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்குமான உறுதியான கொள்கைத் தொகுதியொன்று அவசியமாகின்றது.

பொருளாதார வளர்ச்சியில் விவசாயத் துறையின் பங்களிப்பில் ஏற்பட்ட தற்காலிக பின்னடைவினைத்தொடர்ந்து 1996 இல் பணிகள் துறையின் முக்கியத்துவம் மிகக் கணிசமானதாக

இருந்தது. மொத்த தேசிய உற்பத்தியில் பொதுவான பணிகள் துறையின் பங்கு 1995 இன் 51.0 சதவீதத்தில் இருந்து 1996 இல் 52.1 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

பணிகள் துறையின் வளர்ச்சி விசை மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை, போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்பு, வங்கித்தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் என்பனவற்றின் விரிவாக்கத்தின் மூலம் நிலைத்திருக்கச் செய்யப்பட்டது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் தொடர்ந்தும் முதன்மைத் துறையாக விளங்கியதுடன் மொத்த தேசிய உற்பத்தியின் 22.1 சதவீதத்திற்கும் வகைகூறியது.

இந்தத்துறையின் உயர்ந்த வளர்ச்சி வீத மொன்று இறக்குமதி வர்த்தகத்தின் விரிவாக்கத் திலிருந்தே முக்கியமாக பெறப்பட்டது.

பணிகள் துறையினுள் மிகச் சிறந்த செய லாற்றம் போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்பு துணைத் துறை யிலேயே அவதானிக்கப்பட்டது. சிறீலங்கா ரெலிக்கொம் மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டிலும் கீழான அபிவிருத்தி செயல் திட்டங்களே செயலாற்றத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இலங்கை துறைமுக அதிகார சபை கீழான நவீனமயப்படுத்தல் மற்றும் விரிவாக்கச் செயற்திட்டங்கள் முற்றுப் பெறச் செய்யப் பட்டமையும் மாற்று கப்பலேற்றல் கையாளலில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பும் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. மின்சாரம், வாயு, நீர் வழங்கல், சுகாதார பணிகள் தவிர்ந்த ஏனை துணைத்துறைகள் 1996 இல் தமது கூட்டிய பெறுமதியில் அதிகரிப்புக்களை பதிவு செய்தன. எனினும் 1995 உடன் ஒப்பிடுகையில் தாழ்ந்த வளர்ச்சி வீதங்கள் இந்த துணைத் துறைகளின் வீழ்ச்சியடைந்து செல்லும் தன்மையை குறித்துக்காட்டின. இவற்றில் வங்கித்தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து துணைத் துறை 10.1 சதவீதத்தினால் அதிகரித்து 1995 இன் 10.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகை யில் சிறிதளவான வீழ்ச்சியை குறித்துக்காட்டியது. இந்தத் துறையினுள் இரண்டு துணைத்துறை களான வர்த்தக வங்கித் தொழில் மற்றும் காப்புறுதி என்பன சிறப்பான செயலாற்றத்தைக் காட்டியதோடு ஏனைய துணைத்துறைகளான குத்தகை மற்றும் உண்மைச் சொத்து துணைத் துறைகளின் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சியுறும் செயலாற்றத்தின் மத்தியிலும் வளர்ச்சி விசையை பேணுவதற்கு பங்களிப்புச் செய்தன.

வறட்சியின் விளைவாக மின்னுருவாக்கம் வீழ்ச்சியடைந்ததோடு மின்சாரம் வாயு நீர் வழங்கல் மற்றும் சுகாதார பணிகளின் இரண்டு சதவீத எதிர்க்கணிய வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. இது நீர் மின்வலுவில் தங்கியிருப்பதை குறைப்பதற்கான தேவையினையும் ஏனைய மின் உருவாக்க மூலங்களின் உள்ளார்ந்த ஆற்றலை விரிவாக்குவதற்குமான தேவையினை எடுத்துக்காட்டுகின்றது.

கிரமமான தாராள மயமாக்கப்படலுடன் பொருளாதாரமானது முதன்மைப் பண்டங்களின் அதிக அளவு தங்கியிருப்பதிலிருந்து பன்முகப் படுத்தப்பட்ட ஒன்றுக்கு மாற்றமடைந்துள்ளது. இதில் தயாரிப்புத் துறை இயக்க விசை கொண்ட பணிகள் துறையுடன் ஆதிக்கம் செலுத்தும் பங்கொன்றினை வகிக்கின்றது. அமைப்பு முறையில் மாற்றமைடைந்த பெருளாதாரம் காலநிலை மாற்றங்கள் மற்றும் முதலாம் தர பண்ட விலைகளில் தளம்பல்களின் காரணமாக எளிதில் பாதிக்கப்படக் கூடிய தன்மையிலிருந்து வெளியேறியுள்ளது. இதன் படி அண்மை ஆண்டு களில் உறுதியான வளர்ச்சி வழி ஒன்று சாத்திய மாகி உள்ளது. அண்மை ஆண்டுகளில் பொரு ளாதாரச் செயலாற்றம் சிறந்ததாக இருந்த வேளையில் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு இடமளிப்பதற்கு ஏற்கனவேயுள்ள உட்கட்ட மைப்பின் இயலுமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உற்பத்திச் செலவுகளை குறைப்பதற்கும் உற்பத்தித் திறனை மேம்படுத்தி பொருளாதார அபிவிருத்தியினை வழங்குவதற்கும் போதுமான அளவு உட்கட்டமைப்பு வசதிகள் அத்தியாவசிய மானவையாகும். பருவ பெயர்ச்சி மழைவீழ்ச்சிகள் தவறியமையின் காரணமாக மின் உருவாக்கம் தடைப்பட்டபோது தேசிய மின் இயலளவுக்கு முக்கிய வழங்கல் மூலமாக அமைந்த நீர்மின்வலு உருவாக்கத்தில் காணப்படும் தடைகள் 1996 இல் மேல் எழுந்தன. சொந்த மின் உரு வாக்கத்தை ஊக்குவிக்கும் நிவாரண வழிமுறை கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக வழங்கல் பற்றாக்குறையை இலகுவாக்க

இயலுமாகக் காணப்பட்டதோடு இதன் மூலம் தயாரிப்புத் துறை மற்றும் பணிகள் துறையில் பாரிய உற்பத்தி தடங்கல்களும் தவிர்க்கப்பட்டன. எனினும் தயாரிப்புத்துறை மற்றும் பணிகள் துறையின் வளர்ச்சிப் போக்கினை நோக்கும் போது வலுவுக்கான கேள்வி எப்பொழுதும் உயர்வாகவே இருக்கும். எனவே இந்தத் தடையை நீக்குவதற்கு நீண்ட கால திட்டங்களுடன் உட்கட்டமைப்பினை விரிவாக்கு வதற்கான தெளிவான நடவடிக்கைத் திட்ட மொன்று அவசியமாகின்றது.

1996 இல் நடைமுறை காரணிச் செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 685 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1995 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 591 பில்லியன் மட்டத்தினை விட 15.8 சதவீத அதிகரிப்பாகும். பொருளாதாரத்தின் மொத்த விலை மாற்றத்தின் அளவீடான மொத்த தேசிய உற்பத்தி உட்கிடை விலைச்சுருக்கி 1995 இன் 8.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 12.3 சதவீதத்தினால் அதிகரித்தது.கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண் போன்ற ஏனைய பணவீக்க குறிகாட்டிகளுடன் இந்த போக்கு முரண்படாது காணப்படுகின்றது.

செலவுப்பக்கத்தில் நடைமுறை சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூபா 836 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ள துடன் இது 1995 இன் நேரிணையான ரூபா 737 பில்லியன் மதிப்பீட்டை விட 13.3 சதவீத அதிகரிப்பாகும். மொத்தச் செலவினத்தில் அதி கூடிய பங்கினைக் கொண்டுள்ள நுகர்வுச் செலவு 1996 இல் 15சதவீதத்தினால் அதிகரிதததது இதில் தனியார் நகர்வு 16 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தது. எனினும் 1995 உடன் ஒப்பிடுகையில் 1996 அரச செலவினம் கணிசமான வீழ்ச்சியினை பதிவு செய்தது. 1996 இல் உளநாட்டு மொத்த மூலதன ஆக்கம் 8.4 சதவீதத்தினால் ரூபா 186 பில்லியனுக்கு உயர்வடைந்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமொன்றாக முதலீடுகள் 1995 இன் 25.7 சதவீதத்தில் இருந்து 1996 இல் 24.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1995 இன் ரூபா 102 பில்லியனிலிருந்து 1996 இல் ரூபா 119 பில்லியன்களுக்கு அதிகரித்து உள்நாட்டு சேமிப்புக்களின் விகிதத்தினை 15.3 சத வீதத்திலிருந்து 15.5 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரிக்கச் செய்தது.

## 2.2 துறை வாரியான செயலாற்றம்

ஆண்டின் முதலரைப் பகுதியில் நிலவிய நீண்ட வரட்சியின் காரணமாக 1996 இல் விவசாயத்துறை பின்னடைவினை கொண்டி ருந்தது. முன்னைய ஆண்டின் 3.3 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 1996 இல் இத் துறை 4.6 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சியொன்றினை பதிவு செய்தது. வரட்சி நிலமைகள் விவசாயத்தின் மீது இதே வகையான தாக்கத்தினைக் கொண்டி ருந்த 1987 ஆம் ஆண்டிற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த வளர்ச்சி வீதமாகும்.

அதிமுக்கிய தனிப் பயிரான நெல் சாதக மற்ற வானிலை நிலைமைகளினால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய தொன்றாகும். பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரண்டிலும் நெல் உற்பத்தி முறையே 24 சதவீதத்தினாலும் 30 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டை விட மொத்தமாக 26.7 சதவீத வீழ்ச்சி யினை பதிவு செய்தது. உற்பத்தி அளவுகளின் நியதிகளில் இது 1995 இன் 2,810 ஆயிரம் மெற்றிக் தொன்களிலிருந்து 1996 இல் 2,060 ஆயிரம் மெற்றிக்தொன்களுக்கான வீழ்ச்சியினை குறித்துக் காட்டியதுடன் இது 1979 இல் இருந்து பதிவு செய்யப்படட மிகக் குறைந்த உற்பத்தியாகும். வறட்சியின் காரணமாக நெல் பயிரிடப்பட்ட பரப்பு 1996 இல் 749,000 எக்டெயர்களாகும் .1995 இல் 915,000 எக்டெயாகளாக விளங்கியது. பயிரிடப்பட்ட பரப்புக்கான அறுவடை செய்யப் பட்ட விகிதம் 1996 இல் 75 சதவீதத்திற்கு வீழ்ச்சி அடைந்ததுடன் (சாதாரண நிலைமைகளில் இது கிட்டத்தட்ட 85 சதவீதம்) நெல் விவசாயிகளுக்கான கணிசமான இழப்பு ஒன்றையும் குறித்துக் காட்டியது. நெல் பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களிலும் பயிர்ச் சேதம் காணப்பட்ட போதிலும் குறிப்பாக நான்கு பாரிய நெல் உற்பத்தி மாவட்டங்களான குருநாகல், அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பிரதேசங்க ளில் நிலைமை மிகவும் பாதகமானதாக இருந்தது.

அட்டவணை 2.2
நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்

| துறை | (1982) நிலையான விலையில் கூட்டப்பட்ட பெறுமதி (ரூ. ப. இலட்சம்) | | | |
|---|---|---|---|---|
| | 1993 | 1994(அ) | 1995(அ) | 1996(அ) |
| காய்கறிகள் | 5,398 | 5,181 | 5,541 | 5,765 |
| துணை உணவுப் பயிர் களுக்கான உதவு தொகை (ஆ) | 3,435 | 3,602 | 3,673 | 3,687 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள்(இ) | 1,715 | 1,603 | 1,462 | 1,543 |
| கரும்பு | 221 | 257 | 287 | 279 |
| புகையிலை | 261 | 211 | 175 | 169 |
| விலங்கு வளர்ப்ப (ஈ) | 1,055 | 1,117 | 1,248 | 1,344 |
| ஏனையவை | 1,597 | 1,697 | 1,635 | 1,725 |
| மொத்தம் | 13,681 | 13,667 | 14,021 | 14,512 |

(அ) தற்காலிகமானவை. மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) துணை உணவுப் பயிர்களில் உருளைக் கிழங்கு, மிளகாய், சின்ன வெங்காயம், பயறு, குரக்கன், ஏனைய துணை உணவுப் பயிர்கள் முக்கியமானவையாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

(இ) சிறு ஏற்றுமதிப் பயிர்களில் கோப்பி, மிளகு, கறுவா, ஏலம், மரமுந்திரிகை, வெற்றிலை மற்றும் எனைய சிறு ஏற்றுமதிப் பயிர்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஈ) விலங்கு வளர்ப்பு, பால், முட்டைகள், கோழி வளர்ப்பு மற்றும் இறைச்சி வகைகள் என்பனவற்றை உள்ளடக்கும்.

நெல் உற்பத்தியின் வீழ்ச்சி அரிசியின் விலைகள் மற்றும் இறக்குமதிகள் ஆகிய இரண்டிலும் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டில் மிகக் குறைவாகக் காணப்பட்ட அரிசி இறக்குமதி பத்தாண்டுகளில் அதிய உயர் மட்டத்தை எய்தி 1996 இல் 341,200 மெற்றிக் தொன்களாக விளங்கியது. இறக்குமதிகளின் கணிசமான அதிகரிப்புக்களின் மத்தியிலும் ஆய்விற்குரிய ஆண்டில் அரிசியின் விலைகளும் அதி கூடிய அளவில் அதிகரித்தன. இவ் வாண்டில் கோதுமை மா மற்றும் பாண் என்பனவற்றின் மீதான நுகர்வு உதவிக் கொடுப்பனவு அகற்றப்பட்டமையின் முதன்மைக் காரணத்தினால் கோதுமை மா உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அரிசிப் பக்கம் நகர்ந்தமையும் மேலே குறிப்பிட்ட விலை அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தது.

ஆய்விற்குரிய இவ்வாண்டில் முழுமையாக நோக்குகையில் பெருந்தோட்டத்துறை சிறப்பான செயலாற்றத்தினை கொண்டிருந்தது. தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டின் உச்ச உற்பத்தி யையும் விஞ்சும் வகையில் அதி உயர் மட்டமான 2,580 இலட்சம் கிலோ கிராம்களை எய்தி 5.1 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தது. 1996 இல் இந்த அதிகரிப்பு தனியாக தாழ்நில தேயிலையில் இருந்து பெறப்பட்டதோடு மொத்த உற்பத்தியின் 50 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தது. இந்தத் தோற்றப்பாடு தேயிலைத் துறையில் முதன் முறையாக அவதானிக்கப்பட்டதொன்றாகும். இவ்வாண்டில் நிலவிய கவர்ச்சிகரமான விலை களும் சிறு உடமையாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டமையும் இவ் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்த காரணிகளாக விளங்கின. தேயிலைத் துறையின் சில கம்பனிகளின் முகா மைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் உற்பத்தி யின் மீது சாதகமான தாக்கத்தினை கொண்டி ருந்ததாக நம்பப்படுகின்றது. முன்னைய ஆண்டின் சராசரி 12 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் உலக தேயிலை விலையின் அதிகரித்துச் செல்லும் போக்கு தொடர்ந்ததுடன் இவ்வாண்டில் 43 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தது. 1995 இல் சிறிதளவால் மட்டுமே அதிகரித்த இறப்பர் உற்பத்தி 1996 இல் 6.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இறப்பர் விலைகள் முன்னைய ஆண்டை விட 6 சதவீத வீழ்ச்சி ஒன்றினை பதிவு செய்த போதிலும் கடந்த சில ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட விலைகளுடன் ஒப்பிடுகையில் இன்னமும் உயர்வானதாகவே இருந்தது. முன்னைய ஆண்டில் பதிவு செய்யப் பட்ட 5.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் தெங்கு உற்பத்தி கணிசமான 7.6 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்தது. இது முக்கியமாக 1995 இன் பிந்திய பகுதியில் ஆரம்பித்த வரட்சியின் காலம் கடந்த தாக்கத்தின் விளைவாகும்.

கால்நடை வளர்ப்பையும் உள்ளடக்கிய ஏனைய அனைத்து விவசாய நடவடிக்கை களையும் கொண்ட "ஏனைய விவசாயம் " 1996 இல் 3.5 சதவீதத்தினால் அதிகரித்து முக்கியமாக மரக்கறி வகைகள் மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்களில் அதிகரித்தது. வெளியீட்டு மட்டங்களை பிரதிபலித்தது. சாதகமற்ற வானிலை நிலைமை களின் காரணமாக இவ் வாண்டில் துணை உணவுப் பயிர்களின் உற்பத்தி சிறு அளவால் வீழ்ச்சியடைந்தது. இந்த வகையினுள் சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், குரக்கன், சோளம் என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்த வேளையில் பயறு, தட்டைப் பயறு மற்றும் உருளைக்கிழங்கு என்பன அதிகரிப்புக்களை பதிவு செய்தன. விதைகள் உடனடியாக கிடைக்கத்தக்கதாக இருந்தமையும்

அதிகரித்த நிலப் பயன்பாடும் உருளைக்கிழங்கு உற்பத்தியின் கணிசமான விரிவாக்கத்திற்கு காரணமாக இருந்தது என்பதை குறிப்பிடல் வேண்டும். புத்தளம், குருநாகல், கம்பகா ஆகிய மாவட்டங்களின் சிறு அளவு விவசாயிகளை கடுமையாக பாதித்த ஆண்டின் முதலாம் காலாண்டில் நிலவிய கம்பாறோ நோயின் முதன்மைக் காரணத்தினால் 1996 இல் முட்டை மற்றும் கோழிப்பண்ணை உற்பத்திப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

முன்னைய ஆண்டின் 4.9 சதவீத அதிகரிப்புக்கு மாறாக மீன் உற்பத்தியின் வீழ்ச்சியானது முதன்மைத்துறையின் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கியது. கரை சார்ந்த மீன் பிடித்தொழில் மற்றும் ஆழ்கடல் மீன் பிடித்தொழில் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய கடல் சார் மீன் உற்பத்தியின் வீழ்ச்சியே இதற்கான முழுமையான காரணமாகும். இரண்டாம் காலாண்டில் மின் வெட்டின் காரணமாக உள்ளீடுகளில் (உறை நீர்க்கட்டி , எரிபொருள் என்பன) பற்றாக் குறை காணப்பட்டமையினால் மீன் உற்பத்தி குறைவடைந்தது. பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்தமையின் காரணமாக வடக்கு கிழக்கு கரையோர மீன் உற்பத்தி குறைவடைந்தமையும் இவ் வீழ்ச்சிக்கான மேலதிக காரணமாக விளங்கியது . எனினும் உள்ளூர் மீன் உற்பத்தியின் 11.3 சதவீத அதிகரிப்பானது கடல் சார் மீன் உற்பத்தியின் வீழ்ச்சியை ஓரளவு எதிரீடு செய்தது.

முன்னைய ஆண்டின் 3.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் சுரங்கம் அகழ்தல் மற்றும் கல் உடைத்தல் துறை கணிசமான 8.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சிக்கு சுரங்கம் அகழ்தல் துணைத்துறையின் செயலாற்றமே முக்கிய பொறுப்பாக இருந்தது. இந்த வகையினுள் பாரிய பங்கினைக் கொண்டுள்ள இரத்தினக் கல் அகழ்தல் இவ் வாண்டில் கணிசமாக வளர்ச்சியடைந்தது. 1996 இல் பெறுமதி மிக்க கற்கள் மற்றும் அரைப் பெறுமதியுடைய கற்கள் என்பன வற்றின் ஏற்றுமதி வருவாய் சி. எ. உ நியதிகளில் 16 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய அகழ்வு நடவடிக்கைகளான காரீய அகழ்வு மற்றும் கனிப்பொருள் மணல் அகழ்வு என்பனவும் 1996 இல் விரிவடைந்தன. எனினும் கட்டுமானத்துறையின் மிதமான வளர்ச்சியின் காரணமாக கல்லுடைத்தல் துணைத் துறை மெதுவாகவே வளர்ச்சியடைந்தது.

தொழிற்சாலை கைத்தொழில் தேயிலை இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்களின் பதனிடல் மற்றும் சிறு கைத் தொழில்கள் என்பனவற்றை உள்ளடக்கும் தயாரிப்புத் துறை 1996 இல் 6.5 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்தது. முன்னைய ஆண்டின் நேரிணையான 9.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சியானது வீழ்ச்சியடையும் செயலாற்றும் ஒன்றை குறித்துக் காட்டியது. குறிப்பிடப்பிட்ட இக் காலப்பகுதியில் தயாரிப்புத் துறை அனுபவித்த சாதகமற்ற காரணிகளே இதற்கான முழுமைக் காரணங்களாகும். மொத்த தயாரிப்புத் துறையில் 80 சதவீதத்திற்கும் மேலான பங்கினைக் கொண்ட தொழிற்சாலை கைத்தொழில் துணைத்துறை 7.3 சதவீத உண்மை வளர்ச்சியினை பதிவு செய்து 1995 இன் நேரிணையான 10.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றினை குறித்துக் காட்டியது. தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் துணைத்துறை தவிர்ந்த தொழிற்சாலை கைத்தொழிலின் கீழான ஏனைய அனைத்து முக்கிய துணைத்துறைகளிலும் இந்த வளர்ச்சிப்போக்கு பிரதிபலிக்கப்பட்டது. இந்த இரண்டு வகைகளும் 1995 உடன் ஒப்பிடுகையில் 1996 இல் கணிசமான உயர் வளர்ச்சிச் செயலாற்றத்தினை பதிவு செய்தன.

தெங்கு துணைத்துறையின் உற்பத்தியின் கடுமையான வீழ்ச்சி தெங்கு பதனிடல் கைத்தொழிலை பெருமளவில் பாதித்தது. சிறு கைத்தொழில் துணைத்துறையும் வளர்சசியில் வீழ்ச்சியினை பதிவு செய்தது. நெல் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சியானது நெல் ஆலை நடவடிக்கைகளை கடுமையாக பாதித்ததுடன், இத் துணைத் துறையின் குறைந்த வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தது. தொழிற்சாலை கைத்தொழில் துணைத்துறையின் வீழ்ச்சியும் இந்த போக்கின் மீது ஓரளவு தாக்கத்தினை கொண்டிருந்தது.

1995 இன் 4.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் கட்டுமானத்துறை 3.4

சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்தது. இது கட்டிடங்களின் நிருமாணம் மற்றும் பாதைகளின் நிருமாணம் ஆகிய இரண்டிலும் பிரதிபலித்தது. சீமெந்து அஸ்பெஸ்டோஸ் மற்றும் ஏனைய கட்டிடப் பொருட்கள் போன்ற அடிப்படை உள்ளீடுகளின் குறைப்புடன் இந்த போக்கு இசைவானதாக இருந்தது.

மின்சாரம், வாயு, நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப்பணிகள் துறை 2 சதவீத எதிர்க் கணிய வளர்ச்சியினை அனுபவித்ததுடன் நீர் மின் வலு உருவாக்கத்தின் வீழ்ச்சியினையும் பிரதிபலிப்பதாக இருந்தது. முன்னைய ஆண்டின் 10 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் மொத்த நீர்மின் வலு உருவாக்கம் 28 சதவீதத்தினால் 13,429 கிகா வாட் மணித்தியாலங்களிற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தது. மேலதிக கேள்வியினை ஈடு செய்வதற்காக வெப்ப மின்வலு உருவாக்கம் 972 கிகா வாட் மணித்தியாலங்களிற்கு அதிகரிக்கப்பட்டதுடன் ஏற்கனவே உள்ள ஆகக் கூடிய இயலளவு மட்டங்களும் பயன்படுத்தப்பட்டன. கடுமையான வழங்கல் பற்றாக்குறையின் காரணமாக தேசிய மின் விநியோகத்திற்கு தனியார் துறையினரால் 154 கிகா வாட் மணித்தியாலங்கள வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக டீசல், மின் உருவாக்கிகளை இறக்குமதி செய்வதற்கு காசு தள்ளுபடி மற்றும் சலுகை வீதங்களில் வங்கிக் கடன் வசதிகள் போன்ற கவர்ச்சிகரமான ஊக்கவிப்புக்களின் மூலம் சுய வலு உருவாக்கத்திற்கு தனியார் துறையினருக்கு வசதிகள் வழங்கப்பட்டதுடன் கைத்தொழில் தொழில் முயற்சியாளர்களுக்கு தீர்வையற்ற வலு உருவாக்கிகளின் இறக்குமதிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

ஏனைய பல துறைளுடன் ஒப்பிடுகையில் 1996 இல் போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறை சிறப்பான செயலாற்றத்தினை கொண்டிருந்தது. 1996 இல் இத்துறையின் மொத்த வளர்ச்சி 7.5 சதவீதமாகும். மொத்த தேசிய உற்பத்தியின் பொதுவான வளர்ச்சியில் இதனது பங்களிப்பு 11.8 சதவீதமாகும் 1995 இல் அதனது பங்களிப்பான 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இந்தத் துறையின் அதிகரித்துச் செல்லும் முக்கியத்துவம் குறித்துக் காட்டப்படுகிறது.

மூன்று துணைத் துறைகளினுள்ளும் ஆய்விற்குரிய ஆண்டில் தொலைத் தொடர்பு துணைத்துறை கணிசமான உயர் வளர்ச்சி செயலாற்றத்தினை பதிவு செய்தது. சிறீலங்கா ரெலிகொம் மற்றும் தனியார் துறையின் கீழான வலைய அமைப்பு அபிவிருத்தி இச் செயலாற்றத்திற்கு பங்களிப்புச் செய்தது. இத் துணைத் துறையின் வளர்ச்சியானது செலுலர் தொலைபேசிகள் ரேடியோ பேஜிங் பணிகள் கம்பியில்லா தொலைபேசிகள் தரவு தொலைத்தொடர்பு பணிகள் பொது பே போன்கள் மற்றும் இன்றனெற் ஆகிய பலதரப்பட்ட தொலைத் தொடர்பு வசதிகளில் பிரதிபலிக்கப்பட்டது. 1996 இல் இந்த வசதிகளுக்கான் உதவுநர்களின எண்ணிக்கை 36. 4 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் சிறீலங்கா ரெலிகொம் இன்கீழ் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக காத்திருப்போரின் விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொள்ளும் போது இத் துறையின் மேலதிக வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

துறைமுக நடவடிக்கைகள் மற்றும் அதனோடு தொடர்பான கொள்கலன் கையாளல் மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகள் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி 1996 இல் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பினை வழங்கியது. மூன்று துறைமுகங்களினாலும் கையாளப்பட்ட கப்பற் சரக்குத் தொகுதியின் அளவு 16.4 சதவீதத்தினால் அதிகரித்தது. சரக்குக் கையாளலில் 23.9 சதவீத அதிகரிப்புடன் இரண்டாம் அரையாண்டில் செயலாற்றம் மிக குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்தது. நவீன மயப்படுத்தல் மற்றும்இயலளவு விரிவாக்கம் போன்ற அண்மைக்கால அபிவிருத்தி செயற்திட்டங்கள் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன.

பாதைப் போக்குவரத்து புகைவண்டி போக்குவரத்து மற்றும் வான் வழிப் போக்குவரத்து என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்து துணைத்துறை 1996 இல் 4.7 சதவீதத்தினால் அதிகரித்தது. பொருள் கொண்டு செல்லல் மற்றும் பயணிகள் போக்குவரத்து ஆகிய இரண்டின் ஊடாகவும் பாதைப் போக்குவரத்தும் புகைவண்டி போக்குவரத்தும் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. பொது

போக்கவரத்துத் துறையில் மக்கள் மயப்படுத்தப் பட்ட பேருந்து கம்பனிகள் ஓரளவு சொகுசு நகரங்களுக்கு இடையிலான புதிய பணி ஒன்றினை அறிமுகம் செய்த வளையில் இலங்கை அரசாங்க புகை வண்டிப் பகுதி அதனது வண்டித் தொகுதிக்கு புதிய இரண்டு இயந்திரங்களை சேர்த்தது. எனினும் 1996 இல் நாட்டுக்கான சுற்றுலா வருகையாளர்களின் எண்ணிக்கையை குறைத்த சுற்றுலா துணைத்துறையின் நலிவுற்ற செயலாற்றத்தின் முதன்மைக் காரணத்தினால் 1996 இல் வான் வழிப் போக்குவரத்துத் துறை பின்னடைவினைக் கொண்டிருந்தது.

1996 இல் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறை 5.2 சதவீதத்தினால் அதிக ரித்தது. 1996 இல் இது மொத்த தேசிய உற்பதகியில் 22.1 சதவீதத்தினை கொண்டி ருந்ததுடன் பொதுவான மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியில் 36.0 சதவீத பங்களிப்பையும் கொண்டிருந்தது. 1995 உடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சியானது இந்தத் துறையின் செயலாற்றம் விரைவடைந்தமையை குறித்துக் காட்டியது. இந்த துறையின் வளர்ச்சி விசை முக்கியமாக இறக்குமதி மற்றும் உள்நாட்டு வர்த்தக துணைத்துறையில் இருந்தே பெறப் பட்டது. 1995 இன் 10.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் வங்கித தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துறை 10.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இந்தத் துறையினுள் முதன்மைத் துணைத் துறையானதும் இத் துறையின் கூட்டிய பெறுமதியில் அரை பங்கிற்கும் மேலாக பங்களிப்புச் செய்வதுமான வர்த்தக வங்கித் தொழில்த்துறை 1996 இல் 8.6 சதவீத வளர்ச்சியினை பதிவு செய்தது. குறிப்பாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரித்தகத்தின் விரிவாக்கமே 1996 இன் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்தது. மேலும் தனிப்பட்ட மற்றும் கூட்டுவரிகளின் குறைப்பு வங்கித்தொழில் துறையின் விரிவாக்கத்திற்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் தாராள கொள்கைகளின் தொடர்ச்சி என்பனவும் இந்த விடயத்தில் சாதகமாக இருந்தன.

மொத்தத் துறையின் கூட்டிய பெறுமதிக்கு 11 சதவீத பங்களிப்பினை வழங்கும் காப்புறுதி துணைத்துறை 1995 இன் 3.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.5 சதவீதத்தினால் வளர்ச்சி யடைந்தது. இந்தத் துறையின் வளர்ச்சியானது பொதுக் காப்புறுதிகளை விட ஆயுட் காப்புறுதி களில் இருந்தே முக்கியமாக பெறப் பட்டது. ஐந்து காப்புறுதி கம்பனிகளினதும் ஆயுட் காப்புறுதி வர்த்தகத்திலிருந்தான தேறிய கட்டுப்பண வருவாய் 22 சதவீதத்தினால் 1995 இன் ரூபா 2.6 பில்லியனில் இருந்து 1996 இல் ரூபா 3.1 பில்லியனுக்கு அதிகரித்தது. இதே வேளையில் 1996 பொது காப்புறுதி வாணிபம் 14 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. அதே வேளை பொதுவான பாதிப்பினை கொண்டிருந்த பொருளாதார நடவடிக்கைகளின் கீழ் நோக்கிய போக்கு 1996 இல் நாட்டில் காப்புறுதி நடவடிக்கைகளையும் பாதித்தது.

## 2.3 செலவினம்

நுகர்வுச் செலவு மற்றும் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூபா 836 பில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்ததோடு இது 1996 இல் 13.3 சதவீத அதிகரிப்பினையும் காட்டியது.

ரூபா 650 பில்லியன் என மதிப்பிடப்பட்ட நுகர்வுச் செலவு 1995 இன் ரூபா 566 பில்லியனை விட 15 சதவீத அதிகரிப்பாகும். மொத்த நுகர்வுச் செலவினத்தில் 87 சதவீததிதனைக் கொண்டுள்ள தனியார் நுகர்வுச் செலவினம் 16 சதவீத அதிகரிப்பை பதிவு செய்த 1995 இன் ரூபா 489 பில்லியனில் இருந்து 1996 இல் ரூபா 569 பில்லியனுக்கு அதிகரித்தது. 1995 இல் காணப்பட்ட நுகர்வு முறைக்கு மாறாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணி அல்லா பணிகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பணிகளினது (18.5 சதவீதம்) செல வினை விட தாழ்ந்த வீதம் ஒன்றில் (11.1 சத வீதம்) உயர்வடைந்தது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பணிகளினுள் தெங்கு, ஏனைய உணவுப் பயிர்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் மீதான நுகர்வுச் செலவினம் கணிசமான வளர்ச்சி ஒன்றினை பதிவு செய்ததுடன் தனியார் நுகர்வுச் செலவின் மொத்த அதிகரிப்பின் 65 சத வீதத் திற்கும் மேலான பங்களிப்பினையும் கொண்டி ருந்தது.

தனியார் மற்றும் அரச துறை ஆகிய இரண்டினதும் முதலீட்டுச் செலவை உள்ளடக்கிய மொத்த உளநாட்டு மூலதன ஆக்கம் 1996 இல் 8.4 சதவீதத்தினால் ரூபா 1,8626,40 இலட்சத்துக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தனியார் முதலீடுகள் ரூபா 1,606,460 இலட்சமாக விளங்கிய வேளையில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்திற்கு அதனது பங்களிப்பு 86 சதவீதமாக இருந்தது. 1996 இல் தனியார் முதலீட்டு நடவடிக்கைகளின் ஊக்கமளிக்கும் அபிவிருத்தி ஒன்றாக வெளிநாட்டு முதலீட்டில் கணிசமான அதிகரிப்பொன்று காணப்பட்டது. வெளிநாட்டு நேரடி முதலீடு 1995 இன் ரூபா 10,110 இலட்சத்திலிருந்து (சி.எ.உ 103 இலட்சம்) 1996 இல் ரூபா 47,560 இலட்சத்துக்கு (சி .எ .உ. 595 இலட்சத்திற்கு) அதிகரித்தது. 1995 உடன் ஒப்பிடுகையில் 1996 இல் பட்டியலிடப்பட்ட முதலீடுகளும் அதிகரிப்பொன்றினை காட்டின. வெளிநாட்டு முதலீடுகள் தொலைத் தொடர்பு, வலு மற்றும் துறைமுகப் பணிகள் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் தயாரிப்புத் துறையிலும் செறிவாக காணப்பட்டது. இந்த முதலீடுகளை ஈர்த்துக்கொண்ட முக்கிய கைத்தொழில் வகைகளாக புடவைகள் மற்றும் அணியும் பொருட்கள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின. ரூபா 26 பில்லியன் என மதிப்பிடப்பட்ட அரச முதலீடு பெரும்பாலும் பாதைகள் மின் விநியோகமும் நீர் வழங்கலும் தொலைத்தொடர்பு மற்றும் துறைமுகங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியிலும் பேணலிலுமே செறிவாகக் காணப்பட்டது. எனினும் கட்டுமான நடவடிக்கைகளின் குறைப்பும் போக்குவரத்து கருவிகளின் தாழ்ந்த மட்ட இறக்குமதிகளும் நாட்டின் முதலீட்டு விகிதத்தினை 1995 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25.7 சதவீதத்தில் இருந்து 1996 இல் 24.2 சதவீதத்திற்கு குறைவடையச் செய்தது.

## 2.4 மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருட்கள், காரணி அல்லா பணிகளின் (வெளிநாட்டு மூலவளங்கள்) இறக்குமதிகள் என்பனவற்றை உள்ளடக்கி நாட்டிற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலவளங்கள் 1995 இன் ரூபா 975 பில்லியனில் இருந்து 1996 இல் ரூபா 10,106 பில்லியனுக்கு அதிகரித்தது. ரூபா 131 பில்லியன் மொத்த மூலவளங்களின் அதிகரிப்பில் ரூபா 101 பில்லியன் அதிகரிப்பானது நடை முறை சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பில் இருந்தும் வெளிநாட்டு மூலவளங்களின் ரூபா 30 பில்லியன் அதிகரிப்பில் இருந்தும் உருவாக்கப்பட்டது. இந்த மொத்த மூலவளங்களின் 58.8 சதவீதம் நுகர்வின் மீதும் 16.8 சதவீதம் மூலதன ஆக்கத்தின் மீதும் செலவிடப்பட்ட வேளையில் எஞ்சிய 24.4 சதவீதம் பொருட்களினதும் காரணி அல்லா பணிகளினதும் ஏற்றுமதிகளில் பிரதிபலிக்கப்பட்டது.

நிலையான (1982) விலைகளில் மதிப்பிடப்பட்ட மூலவளங்களின் கிடைப்பனவு 1995 இன் 4.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் 3.5 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மை நியதிகளில் நுகர்வுச் செலவினம் 1995 இன் 5.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1996 இல் 3.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் முன்னைய ஆண்டின் 1.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 2.3
(1982) நிலையான விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

| விடயம் | சதவீதப் பங்கு | | | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1994(அ) | 1995(அ) | 1996(அ) | 1995 | 1996 |
| 1. மொத்த மூலவளங்கள் | 100 | 100 | 100 | 100 | 4.0 | 3.5 |
| மொ.உ.உ. சந்தை விலைகள் | 68 | 66 | 67 | 67 | 5.5 | 3.8 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 32 | 34 | 33 | 33 | 1.0 | 2.8 |
| 2. பயன்பாடு | 100 | 100 | 100 | 100 | 4.0 | 3.5 |
| நுகர்வு | 60 | 58 | 59 | 59 | 5.4 | 3.5 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன வாக்கம் | 21 | 17 | 17 | 16 | 1.0 | 2.5 |
| அரசு | 3 | 2 | 2 | 2 | 22.7 | 0.1 |
| அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 18 | 15 | 15 | 15 | -1.4 | 2.8 |
| இருப்புக்களின் மாற்றம் | 0 | 0 | 0 | 0 | -60.7 | 90.8 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 19 | 24 | 24 | 24 | 2.9 | 3.9 |

(அ) தற்காலிகம் — மூலம் : இலங்கை மத்திய வங்கி

## 2.5 உள்நாட்டு சேமிப்புக்கள்

*1996 இல் உள்நாட்டு சேமிப்புக்கள் ரூபா 1,192,600 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு இது முன்னைய ஆண்டை விட 16.8 சதவீத மேம்பாடு ஒன்றினையும் எடுத்துக்காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான உள்நாட்டு சேமிப்புக்களின் விகிதம் 1995 இன் 15.3 சத வீதத்திலிருந்து 1996 இல் 15.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. முக்கியமாக வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களின் பண அனுப் பல்களை உள்ளடக்கிய தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் ரூபா 394,850 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டை விட 13.4 சதவீத அதிகரிப்பை பிரதிபலித்தன. உள்நாட்டு சேமிபபுக் களையும் தேறிய வெளிநாட்டு வரு வாயையும் உள்ளடக்கிய தொகை என வரைவிலக்கணம் செய்யப்பட்ட தேசிய சேமிப்புக்களும் ரூபா 1,475,520 இலட்சத்துக்கு அதிகரித்து 1996 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19.2 சதவீதமாக விளங்கியது.*

அட்டவணை **2.4**

**நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்**

ப. இ. ரூபாய்களில்

| வகை | 1982 | 1994(அ) | 1995(அ) | 1996(அ) |
|---|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | 99,238 | 579,084 | 667,772 | 768,934 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் | 11,770 | 88,149 | 102,111 | 119,260 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -1,959 | - 8,310 | -6,958 | -11,193 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 5,494 | 30,989 | 34,820 | 39,485 |
| 5. தேறிய சேமிப்புக்கள் | 15,305 | 110,828 | 129,973 | 147,552 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 2) | 11.9 | 15.2 | 15.3 | 15.5 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 5) | 15.4 | 19.1 | 19.5 | 19.2 |

(அ) தற்காலிகம் மூலம் : இலங்கை மத்திய வங்கி